**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.**

**அ.வ.எண். 75/2022**

**இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.J.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ம் நாள் பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| **பெயர். ஏழுமலை** | **வயது** |
| **த.பெ(அ) க.பெ** | **மதம்** |
| **கிராமம்** | **வட்டம்** |

**<u>பி.சா.1 முதல் விசாரணை</u>**

**25.10.2025**

இந்த வழக்கில் நான் **1**ம் பிரதிவாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**1. 17.03.2022** தேதியில் பழனி மற்றும் பலர் எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2. 13.09.2022** தேதியில் ஏழுமலை பெயரில் உள்ள பட்டா எண்.**2464** கணினி

நகல் **பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. **12.04.2022** தேதியில் வாதிகள் வழக்கறிஞர் எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. **18.04.2022** தேதியில் பிரதிவாதி வழக்கறிஞர் வாதிக்கு கொடுத்த பதில் அறிவிப்பு அலுவலக நகல் **பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை (3 எண்ணிக்கை) அசல் **பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)